1983 ஜனவரி 31]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) ரூ. 21.20 லட்ச மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனைக்கு வந்து இப்போது அதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் பயன் பெறும்? பழைய ஆயக்கட்டுகள் இதிலே சேர்க்கப் பட்டிருக்கின்றதா? புதிய ஆயக்கட்டுகள் எவ்வளவு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் சுமார் 806 ஏக்கர் புதிய மற்றும் பழைய நிலங்கள் பயனடையும். ஆத்தங்கரைப் பட்டி அணையின் கீழ் வரும் 220 ஏக்கர் நிலங்களும் இந்தத் திட்டத்தில் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் வெட்டியெடுக்கப்படும் கரும்பாறைகள்

*வினா எண். 76—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கள்ளத்தனமாக கரும்பாறையை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் மற்றும் இந்திய அரசின் 1957 ஆம் ஆண்டு கனிமங்களும் சுரங்கங்களும் (முறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், இவைகளில் அரசுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு கள்ளத்தனமாக கரும் பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதை அபராதம் விதித்து அல்லது நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பாறையை தனியார் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதைத் தடைசெய்து அரசே ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்குமே, அரசு சொந்தப் பொறுப்பில் அவற்றை வெட்டியெடுத்து மெருகேற்றிக் வெளிநாடுகளுக்கு அனுப்பும் உத்தேசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே 'டாமின்' நிறுவனம் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. சுமார் ஒரு கோடி ரூபாய் வரையில் இது வரைக்கும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. ஏற்கனவே உரிமம் அதாவது லீஸ் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் தொடர்ந்து அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய லீஸ் முடிகிறபோது டாமின் நிறுவனம் எடுத்து வெட்டி அனுப்புகிற முயற்சியில் ஈடுபடும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இந்தக் கரும்பாறையை எந்த எந்தப் பணிகளுக்காக பயன்படுத்துகிறார்கள் என்பதை நேரில் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நிபுணர் குழு ஒன்று வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, டாமின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா? அதற்குப் பணம் ஒதுக்கியுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, சுமார் மூன்று கோடி ரூபாயில் கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் ஒன்றை சென்னை துறைமுகத்தின் அருகிலே நிறுவதற்கான பணியில் ஈடுபட்டிருக்கிறது. அரசு நிதி ஒதுக்கப் செய்திருக்கிறது. ஐ.டி.பி.யிலேயிருந்து கடன் வரவேண்டி இருக்கிறது. அது வந்த பிறகு இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. அதெல்லாம் முடிந்த பிறகு அந்த கட்டிங் அண்ட் பாலிஷிங் யூனிட் புதிதாக துவங்கப்படும்.

(முற்பகல் 10-10)

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கள்ளத்தனமாக கல்லை வெட்டுவதைத் தடுப்பதற்கு, இந்த அரசுக்குத் தேவைப்படாத கறுப்புக் கல்லை தனியார்களுக்குக் குத்தகைக்கு கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்ன அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உரிமம் பெற்றிருப்பவர்கள், லீஸ் பெற்றிருப்பவர்கள் வெட்டி எடுத்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். புதிதாக, அரசாங்கத்திற்குத் தேவையில்லையென்றால், அல்லது டாமின் நிறுவனத்தாலே செய்ய முடிய

1983 ஜனவரி 31]

வில்லையென்றால், மிகக் குறைவாக இருக்கிற பகுதிகளில், மிக ரெமோட்டான பகுதிகளில் இருக்கிற பிளாக்ரைட்டைப் பொறுத் வரைக்கும் தனியாருக்குக் கொடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

சோளிங்கர் நகருக்கருகிலுள்ள மலைப் பகுதிகளில் கிடைக்கக் கூடிய கனிப்பொருள்.

*வினா எண். 77 திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் சோளிங்கர் நகருக்கு அருகில் உள்ள மலைப்பகுதிகளில் கனிப்பொருள் ஏதாவது கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஆம். இது 'டாமின்' நிறுவனத்தின் ஆய்விலுள்ளது.

கூடலூரிலுள்ள மைக்கா சுரங்கங்கள்.

*வினா எண். 78 திரு. கே. உச்சி:—மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் மைக்கா சுரங்கங்களைத் தனியார் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வருடம் ஒன்றுக்கு உற்பத்தியாகும் மைக் காவின் அளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) 1979-80 ஆண்டு 23 டன்னும் 1980-81 ஆம் ஆண்டு 58 டன்னும் மைக்கா அந்தப் பகுதியில் தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே ஆரம்பத்திலே லீஸ் பெற்ற சுமார் 12 பேர்கள் அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு, கே. உச்சி: தலைவர் அவர்களே, அந்த லீஸ், உரிமம் பெற்றவர்கள் எந்த அடிப்படையில் பெற்றிருக்கிறார்கள் என் பதையும் அதனால். அரசுக்கு என்ன இலாபம் கிடைக்கிறது என்றும் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, அரசுக்கு சீனரேஜ் கிடைக்கிறது? என்ன அடிப்படையிலே என்றால் அதிலே அடிப்படை ஒன்றும் இல்லை,